Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU




முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 03 திங்கட்கிழமை (17.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 109

## கோவில் கிணற்றில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவில் கிணற்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த கோவில் பகுதியில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் வசித்து வந்த சின்னத்தம்பி நாகம்மா (வயது - 71) என்ற வயோதிபப் பெண்ணின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டது.

குறித்த வயோதிப் பெண் நேற்று முன்தினம் நள்ளிரவுக்குப் பின்னர் அவரது வீட்டில் இருந்து

(11ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளப் பாதிப்புக்களுக்கு உதவ பிரிட்டிஷ் இளவரசர் தயார்

(கொழும்பு)

அண்மைய மழை மற்றும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயாராக இருப்பதாக பிரித்தானிய இளவரசர் சார்ல்ஸ் தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் குறித்து தனது கவலையைத் தெரிவித்துள்ளதுடன், இந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத்தயாராக இருப்பதாகவும் குறிப்

(11ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் மக்கள் எமது தேசத்தின் பங்காளிகள்

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு தயார்!

## கேரதீவில் ஜனாதிபதி மகிந்த பேச்சு

(யாழ்ப்பாணம்)

**தமிழ்மக்கள் எமது தேசத்தின் முக்கிய பங்காளிகள். இதனால் தமிழ் மக்களைப் புறந்தள்ளி வைத்துவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை நான் ஒரு போதும் முன்வைக்கமாட்டேன். தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தமிழ்மக்களின் அரசியல் பிரதி நிதிகளுடன் எமது அரசு ஏற்கனவே பேச்சுக்களை நடாத்திவருகிறது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

(11 ஆம் பக்கம் பார்க்க)



## புதிய பாலத்தை திறந்து வைத்தார் ஜனாதிபதி; கேரதீவு–சங்குப்பிட்டி போக்குவரத்து இலகுவாகிறது

(யாழ்ப்பாணம்)

கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பாலத்தை நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை பூநகரியுடன் இணைக்கும் மேற்படி கேரதீவு - சங்குப்பிட்டி பால நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள ஏற்கனவே நிலையிலேயே இப் பாலத்தை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று மாலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களை இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில் மற்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)



## நாவற்குழியில் வீதி விபத்து; வைத்தியசாலை ஊழியர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் யாழ்.போதனா வைத்தியசாலைச் சிற்றூழியர் ஒருவர் பலியானார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான தச்சன்தோப்பு நாவற்குழியைச் (11ஆம் பக்கம் பார்க்க)


## யாழ். நகரில் இன்று தேசியப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளையொட்டி தேசியப் பொங்கல் நிகழ்வு இன்று காலை 10.00 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெறும் இப்பொங்கல் விழாவில் விசேட பிரதம விருந்தினராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.



## இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு; அரசுடன் கூட்டமைப்பு வார இறுதியில் பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை ஒரு ஆரம்பம் எனக் குறிப்பிட்டுள்ள மாவை சேனாதிராஜா, எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை

(12ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு அமைச்சரின் சில பொறுப்புக்கள் அரசினால் திடீரென மீறப்பெறப்பட்டுள்ளன



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் இருந்த சில பொறுப்புக்கள் அரசினால் மீளப பெறப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மனித உரிமைகள் விவகாரங்களைக்கையாளும் பொறுப்பு தற்போது அவரிடமிருந்து மீளப் பெறப்பட்டிருக்கிறது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் இதுவரை இருந்துவந்த மேற்படி மனித உரிமைகள் நடவடிக்கைகளுக்கான பொறுப்புகள், தற்போது பெருந்தோட்டத்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் சில தினங்களில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க, நேற்றையதினம் ஜெனீவா நோக்கி சென்றுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாவில் இன்றும் நாளையும்நடைபெறவுள்ள அனைத்துலக நாடாளுமன்ற ஆணைக் குழுவின் விசேட அமர்வில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சராக, மகிந்த சமரசிங்க பொறுப்பு வகித்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதன் காரணமாகவே மேற்படி அமர்வில் பங்கு பற்றுவதற்காக அவர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## உளவளத்துணை பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உளவளத்துணை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. 3 மாதகாலமாக இப்பயிற்சி வழங்கப்பட்டதுடன் இதில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

புனர்வாழ்வு பெற்ற இந்தப் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்படவேண்டும் என்ற நோக்கில் இவர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் வவுனியா புனர்வாழ்வு நிலையத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (39)

## அசாதாரண காலநிலை வடக்கில் தொடரும்

(கொழும்பு)

வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அசாதாரண காலநிலை தொடர்ந்தும் நிலவும் என வானிலை அவதான நிலையம் நேற்று தெரிவித்தது.அத்துடன் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படும் எனவும், மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அந்த நிலையம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை அனுராதபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் காலநிலை ஓரளவு சீரடைந்துள்ளதாகவும், முகாம்களில் தங்கியிருந்த மக்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச தொலைபேசி சேவை

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு இலவச தொலைபேசிச் சேவை வழங்கப்படவுள்ளதாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நேற்றுத் தெரிவித்தார். இச்சேவை மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் இலங்கை ரெலிகொம் நிலையங்களூடாக தங்களது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

## நாட்டில் வெள்ளப்பாதிப்பு அதிகம்; தொற்றுநோய் அபாயம் எதுவுமில்லை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தினால் மக்களிடம் எதுவித தொற்று நோய் அபாயமும் இல்லையென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் சுகாதார சூழ்நிலையை மேம்படுத்தும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடத்தில் சிறந்த சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில்5 நடமாடும் மருத்துவ சேவைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபை மக்கள் நிதியம் கர்ப்பிணித்தாய்மார்களுக்கென பாதுகாப்பு ஆடைகளை வழங்கியுள்ளதாகவும், சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த வைத்தியக் குழு விரைவில் நாட்டிற்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காத்தான்குடியில் நிவாரண மோசடி; பொதுமக்கள் திரண்டு புகார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் உள்ள இராம கிருஸ்ண மிஷன் பாடசாலையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்கியிருந்த மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்படாமல் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக அறியவந்துள்ளது.

இதனையறிந்து ஒன்று கூடிய பொதுமக்கள் பொலிஸிற்கு அறிவித்ததையடுத்து அங்கு விரைந்த காத்தான்குடிப் பொலிஸார் ஒரு தொகை நிவாரணப் பொருட்களைக் கைப்பற்றினர்.

சுனாமியனர்த்தத்தின்போதும் இவ்வாறான முறைகேடுகள் பல தங்களால் கண்டறியப்பட்டபோதும் சரியான நடவடிக்கைகள் உரியஅதிகாரிகளால் எடுக்கப்படவில்லை. அதனாலேயே மென்மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்கின்றன.

எனவே இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் உரிய அதிகாரிகளால் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை இந்த நிவாரணம் பதுக்கிவைக்கப்படவில்லை யெனவும் உரியவர்களுக்கு வழங்கவே வைக்கப்பட்டிருந்ததாகவும் அதற்குள் அவசரப்பட்டு மக்கள் இந்த களேபரத்தில் இறங்கியதாகவும் குறித்த முகாமுக்கு பொறுப்பான கிராமசேவகர் தெரிவித்தார்.

## ஓய்வூதியம் பெறுவதில் சாதனை!

(கொழும்பு)

இலங்கையில் அதிக காலமாக ஓய்வூதியம் பெற்று வந்த நபர் சில நாட்களுக்கு முன் இறந்து விட்டார். இறக்கும்போது இவருக்கு வயது 106. இவரின் பெயர் ஏ.ஆர். எம் செரீப். இவர் ஒரு மௌலவி.

கடந்த 55 வருடங்களாக இவர் ஓய்வூதியம் பெற்று வந்து இருகின்றார். இவருக்கு முன்னர் அதிக காலம் ஓய்வூதியம் பெற்றவர் அமைச்சர் சரத் அமுனுகமவின் தாய். இவர் 104 வயதில் கடந்த வருடம் இறந்து விட்டார்.

## புதிய தம்பதிகளுக்கு இனிப்பான செய்தி; தேனிலவைக்கழிக்க சொகுசு ரயில்!

(கொழும்பு)

புதிதாக திருமணம் முடிந்தவுடன் தம்பதிகளை தேனிலவுக்கு அனுப்பி வைப்பது வழமை. அது நட்சத்திர ஹோட்டல்களாக, பிரசித்தமான சுற்றுலா பிரதேசங்களாக, ஏன் வெளிநாடுகளாகக் கூட அமையும் அது அவரவர் வசதியினைப் பொறுத்தது.

ஆனால் தம்பதிகள் ரயிலில் தமது தேனிலவினை கழிக்கும் வாய்ப்பு இலங்கையருக்கு கிடைக்கப் போகிறது.

இதன் அடிப்படையில் அதிசொகுசு ரயில்களை சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வர ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதனை இருமாத காலப்பகுதிக்குள் இறக்குமதி செய்யவும் தீர்மானித்துள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட இருக்கும் இரண்டு சொகுசு ரயில்களில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

ஓய்வு விடுதிகள் சொகுசு அறைகள் குறிப்பாக புதுமணத் தம்பதிகள் தமது தேனிலவினை கழிப்பதற்கான வாய்ப்பு போன்ற நவீன வசதிகளை பயணிகள் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை ரயில்வே திணைக்கள பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் செயற்படவிருக்கும் இந்த ரயில் சேவையினை நாட்டின் பிரதான ரயில் நிலையங்களூடாக இயக்குவதற்கு தாம் எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் வெள்ளப்பாதிப்பு; நிவாரணப்பணிகள் தொடர்கின்றன

(கொழும்பு)

அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச்சேர்ந்த மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் தொடர்ந்தும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் உள்ள 15 மாவட்டங்களில் தாக்கம் செலுத்திய மழையுடனான காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றன.

இந்த நிலையில் நிவாரணப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப்கொடிபில்லி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பொலனறுவை மாவட்டத்தில் மீண்டும் மழை ஏற்பட்டதைத் தொடர்ந்து, பராக்கிரமசமுத்திரத்தின் நான்கு அவசர கதவுகள் 6 அங்குலம் வரையில் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியின் கல்லெல்ல பிரதேசம் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் நாட்களில், வடக்கு, வட மத்தி, ஊவா மற்றும் மத்திய மாகாணத்துடன், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## ஜன்னல் கம்பியை உடைத்து தங்க நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை-தபால் கட்டைச்சந்தி பகுதியில் உள்ள வீட்டில் 20 பவுண் தங்க நகைகள் திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது. நேற்றைய முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் ஜன்னல் கம்பியை உடைத்துப் புகுந்த திருடர்கள் வீட்டுக்காரர்களையும் தாக்கிவிட்டு நகைகளுடன் தப்பிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஜன்னல் கம்பியை உடைத்து உள்நுழைந்து திருடியவர்கள் தம்மோடு சண்டையிட்ட கோகுலதாசன் கோபிநாத் (வயது -25) என்பவரைத்தாக்கியதில் அவர் காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (52)

மனிதனின் பண்பு தேசப்பற்றாக இல்லாமல், உலகப் பற்றாக இருந்தால், உலக மக்களுக்கெல்லாம் பொதுவான ஒரே தேசிய கீதம், கொடி அமைந்துவிடும். உலகளவில் மகிழ்ச்சி பொங்கும், மானிட சமுதாயத்தை மனிதன் நினைத்தால் உருவாக்க முடியும். - ரஸ்ஸெல் -

தினப்பதிப்பு
தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## ஊடகப்பணி

"பத்திரிகைகள் உள்ள அரசாங்கம் வேண்டுமோ? பத்திரிகைகள் இல்லாத அரசாங்கம் வேண்டுமோ? என என்னைக் கேட்டால் பத்திரிகைகள் உள்ள அரசாங்கமே வேண்டும் என்று தயங்காது பதில் கூறுவேன்" என ஒரு ஜனநாயக அரசியல் அறிஞர் கூறியுள்ளார்.

இக்கூற்றின்பிரகாரம் ஜனநாயக அரசு ஒன்றுக்கு பத்திரிகைகள் முக்கியமான பங்களிப்பை வழங்க முடியுமென ஊகிக்க முடிகிறது.

எங்கள் உருவத்தை நாம் கண்ணாடியில் பார்த்து எப்படி மகிழ்கிறோமோ அதேபோன்று நாட்டு நடப்புக்களையும், குறைநிறைகளையும் பல்வேறு வடிவங்களில் உடனுக்குடன் மக்களுக்கு அறிவிக்கும் பணியில் பத்திரிகைகள் தினமும் ஈடுபட்டு மக்கள் மத்தியில் உலா வருகின்றன.

பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் விரும்பியோ, விரும்பாமலோ மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்துக்காக பத்திரிகையாளர்கள் சுய விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப எதனையும் எப்படியும் எழுதலாம் என்று எண்ணிவிடக்கூடாது. பத்திரிகையாளர்களது எழுத் துக்கள் ஆலோசனை கூறுவதாகவும், வழிநடத்திச்செல்லக் கூடியதாகவும் அமையவேண்டும்.

சம்பவங்களை, அச்சம்பவங்களுக்கு அப்பாற்பட்டவகையில் திரிபுபடுத்தி சுய விருப்புகளை புகுத்தியெழுதி பத்திரிகைகளில் பிரசுரமாகும்போது அது பலவிதமான வியாக்கியானங்களையும், கருத்து மோதல்களையும் ஏற்படுத்தி மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணி விடக்கூடும். இதில் பத்திரிகையாளர்கள் மிகவும் அவதானமாக இருந்து செயற்படவேண்டும்.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் பத்திரிகை உயரதிகாரிகளையும், ஆசிரியர்களையும் அழைத்து அவர்களுக்குக் கூறிய செய்திகளை ஒவ்வொரு பத்திரிகையாளர்களும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

"நாட்டிலுள்ள ஊடகங்கள் அனைத்தும் குறிப்பாக தமிழ் ஊடகங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தயவுசெய்து நாட்டிலுள்ள இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த உதவிசெய்யுங்கள். தமிழ் மக்களின் வேதனை, வடுக்களை சுகப்படுத்துங்கள். அவர்களின் மத்தியில் வெறுப்புணர்வுகளுக்கும், பழிவாங்கும் எண்ணங்களுக்கும் தூபமிடாதீர்கள். இவ்விதம் தமிழ் பத்திரிகைகள் அரசாங்கத்திற்கு உதவிசெய்ய முன்வராவிட்டால் நாட்டில் இனங்களுக்கிடையே பகைமை உணர்வு நீங்காது" என்கிற ஜனாதிபதியின் இக்கூற்று தமிழ் பத்திரிகைகள் தொடர்பில் அவர் வைத்திருக்கக்கூடிய மன அழுத்தம் எவ்வாறாக உள்ளதென்பதைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

தமிழ் பத்திரிகைகளின் போக்குப் பற்றியும் பத்திரிகையாளர்கள் பற்றியும் அண்மைக்காலமாக உயர் அரச அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை வெளியிட்டுவரும் கருத்துக்களுக்கு மேலாக ஜனாதிபதி தெரிவித்திருக்கும் கருத்துக்களையும் பத்திரிகையாளர்கள் சிந்திக்க வேண்டும்.


வர்த்தக நோக்குடன், கிடைக்கும் செய்திகளை அரைகுறையான விளக்கங்களுடன் பெற்று அவற்றை மிகைப்படுத்தி எழுதுவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படும்போது அதனால் பாரிய விளைவுகள் ஏற்பட ஏதுவாகிறது.

இத்தகைய பாரிய விபரீத விளைவுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு, ஆரோக்கியமான ஜனநாயக சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையில் பத்திரிகா தர்மத்தினைக் கடைப்பிடித்து கூரிய வாளின் மேல் நின்று கவனமாக நடப்பது போல் பத்திரிகையாளர்கள் தமது பேனாமுனையைப் பயன்படுத்த வேண்டும். இதனால் ஒருவருக்கும் ஒரு பொல்லாப்பும் ஏற்படமாட்டாது.

- ஆசிரியர் -

# மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்படும் கண்ணிவெடிகள்

## எச்சரிக்கிறது ஐ.நா



(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் வடிந்து செல்லும் தண்ணீர் ஆகியவற்றால் கண்ணிவெடிகள் அடித்துச் செல்லப் பட்டுவதாக ஐக்கியநாடுகள் அமைப்பு எச்சரித்துள்ளது. புதைக்கப்பட்டிருந்த இக்கண்ணிவெடிகள் வெளியில் எடுக்கப்பட்டு ஏற்கனவே கண்வெடி அகற்றப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் கொண்டு செல்லப்படுவதாக மனிதநேய விவகாரங்களின் இணைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் எச்சரித்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரிகின்ற நபர்கள் இக்கண்ணிவெடிகள் குறித்து விழிப்பாக இருக்குமாறும், ஆபத்துக்குரிய தகவல்கள் ஏதும் கிடைத்தாள் உடன் அதற்குரிய அதிகாரிகளுக்குப் பரிமாறுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

ஆகவே வெள்ளம் காரணமாக மீண்டும் கண்ணிவெடிகள் பரவியுள்ள பகுதிகளில் மீள் ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளதா என்பது குறித்தும் பிராந்திய கண்ணிவெடி அகற்றும் நிலையங்கள் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா வடக்கு பிரதேசத்தில் காணி உரிமைப் பத்திரம் வழங்கல்

(வவுனியா)

வவுனியா வடக்குப் பிரதேசத்திற்கு உட்பட்டவர்களுக்கான காணி உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு வவுனியா முத்துமாரி நகரில் காலை 9மணிமுதல் இடம்பெறவுள்ளது.

வடமாகாண காணி ஆணையாளரின் பிரசன்னத்தில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நீண்டகாலமாக பராமரித்து வந்த காணி உரிமையாளர்களுக்கு அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இவ்வுரிமைப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளது.

இதனை வடமாகாண ஆணையாளர் தயானந்தன், வடமாகாண விவசாய ஆணையாளர் செ.பத்மநாதன் ஆகியோரால் வழங்கப்படவுள்ளது. (12)

## 10இற்கும் மேற்பட்டவாகனங்கள் ஏ9 பாதையில் தினமும் பழுது

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பெய்யும் மழையால் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான வீதிகள் குன்றும் குழியுமாகியுள்ளது.

வீதிகள் பழுதடைந்திருப்பதால் அதனைப் பயன்படுத்தும் வாகனங்களில் தினமும் 10 இற்கு மேற்பட்ட வாகனங்கள் இடைவெளியில் பழுதடைந்து நிற்கின்றன.

ஓமந்தைக்கும், கனகராயன் குளத்திற்கும் இடைப்பட்ட வீதி மிகவும் மோசமடைந்து காணப்படுவதுடன், மாங்குளப் பகுதியில் உள்ள வீதி மதகு 3 மாதத்திற்கு மேலாக பழுதடைந்து காணப்படுபவதுடன் அதனைத் திருத்தாமையிட்டு மக்கன் விசனம் தெரிவித்துள்ளனர். (12)

# வரிச்சலுகை வாகனங்களை 3வருடங்களின் பின் விற்கலாம்

(கொழும்பு)

சிரேஷ்ட அரசாங்க பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை 3 வருடங்களின் பின்னர் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்ததின்படி 5 வருடங்களின் பின்னரே அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்ய முடியும் என அறிவிககபட்டிருந்தது.

புதிய நடைமுறை தொடர்பில் மோட்டார் வாகன ஆணைக் குழுவுக்கு இறைவரித் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் நிதி அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையின் படி அரசாங்கத்தின் நிர்வாகம் முகாமைத்துவம் உள்ளிட்ட துறைகளில் பணியாற்றுகின்ற சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வரிச்சலுகை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்ய முடியம் என அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதற்கு 6 வருடசேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதன் கீழ் 2000 - 2600 குதிரை வலுவை கொண்ட வாகன இறக்குமதிக்கு 55சதவீதம் தொடக்கம் வரி குறைப்பு வழங்கப்பட்டிருந்தது.

1600 குதிரை வலு வாகனங்களுக்கு 60 சதவீத வரி குறைப்பும் 2000 குதிரை வலுவுக்கு 70 சதவீத வரிகுறைப்பும் வழங்கப்பட்டுள்ளன.

## வைரவப்புளியங்குளத்தில் கூட்டமைப்பு அலுவலகம்

(வவுனியா)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அலுவலகம் ஒன்று வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள வைரவப்புளியங்குளப் பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த வாரம் முதல் கூட்டமைப்பின் செயற்பாடுகள் இவ்வலுவலகத்தில் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வவுனியா மன்னார், முல்லைத்தீவு.மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான சகல பிரச்சார பணிகளும் இந்த அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வன்னி மாவட்ட வேட்பாளர்களை தெரிவு செய்யும் குழு இந்தவாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 வாரம் தங்கியிருந்து வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான பணிகளில் ஈடுபட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு துணுக்காய், புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (39)

## இலங்கை போக்குவரத்து சபைக்கு இந்த வருடம் 2000 புதிய பஸ்கள்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபை இந்த வருடம் 2 ஆயிரம் புதிய பேரூந்துகளை சேவையில் ஈடுபடுத் தவுள்ளதாக சபையின் தலைவர் எம். டி. பந்துசேன தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

தற்போது சேவையில் ஈடுபடும் 5 ஆயிரம் பேரூந்து களில் ஆயிரம் பேரூந்துகள் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட வேண்டியுள்ளது. இதனால் மேலதிகமாக 2 ஆயிரம் பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையினை குறைந்தது 40 வீதமாவது பூர்த்தி செய்ய வேண்டும் என்பது போக்கு வரத்துச் சபையின் முக்கிய நோக்கமாகும்.

இதனை நிறைவேற்றும் முகமாக இந்த 2 ஆயிரம் பேரூந்துகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் இதன் மூலம் பொதுமக்கள் போக்கு வரத்துச் சேபையினை சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த க.பொ.த.சாதாரண பரீட்சையின் சில பாடங்களுக்கான செயன்முறை பரீட்சை இன்று நடை பெறவிருந்த போதிலும் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

காலநிலை சீர்கேடு காரணமாகவும் பலமாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாகவும் இந்த செயன்முறைப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இப்பரீட்சை பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கூட்டம்

(வட்டக்கச்சி)

கிளி. வட்டக்கச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு பாடசாலை அதிபர் மனுவேல் கேட்டுக்கொள்கின்றார். (45)

## ஆனையிறவில் சிற்றுண்டி வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனையிறவு படைத்தள இராணுவத்தினர் தைப் பொங்கல் தினமான நேற்று முன்தினம் பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்குப் பொங்கல் மற்றும் தேநீர் மற்றும் சிற்றுண்டிப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இதனால், பயணிகள் இராணுவத்தினருக்கு நன்றி தெரிவித்ததுடன் தமது மகிழ்ச்சிகளையும் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

# எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியடைவதற்கு வாழும்போது கலைஞரை பாராட்டவேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

(தொல்புரம்)

**கலைஞர்களை நாம் பாராட்டவேண்டும் என்றால் வாழும்போதே அவர்களைப் பாராட்ட வேண்டும். அத்தகைய பாராட்டுக்களே அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் மகிழ்சியைக் கொடுக்கும் என்று நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்தார்.**


அண்மையில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில்நடைபெற்ற இசையருவி வி.கே. பஞ்சமூர்த்தியின் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில், கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு நல்லூர் பிரசித்தி பெற்ற இடமாகும். அதனாலேயே இம்முறை எட்டு கலைஞர்கள் எமது பிரதேசத்தில் அரசின் கலாபூசணம் விருதினைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

இசைக்கு சேவை செய்துள்ள இவர் தமது கலைப் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளார்.

எமது சமூகத்திலுள்ள புத்திஜீவிகள் நல்ல வழிகாட்டிகளாக இருக்கவேண்டும். நாம் கடந்த கால அசாதாரண நிலையிலிருந்து நல்லதொரு சூழ்நிலைக்குச் செல்வதற்கு வழிநடத்த வேண்டிய பொறுப்பு இவர்களுக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. அருள்வேல், பிரபல சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி



சிவஞானம், நாடாளுமன்ற ஓய்வுநிலை சிரேஷ்ட அறிக்கையாளர் செ. நடராசா, சங்கீதபூஷணம் வி. சிவஞானசேகரம், முத்தமிழ் மணி ஆசிரியர் ஜெ. கோகலே, தவில் வித்துவான் இ. முருகானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாதஸ்வர கலைஞர் கலாபூஷணம் கோதண்டபாணி பஞ்சரத்தினம் கோண்டாவில் மக்கள் சார்பாக வாழ்த்துப்பா வழங்கப்பட்டு பொன்னடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (26)

## பட்டப்பிரியர்கள் கவலையடைவு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வரும் சீரற்ற மப்பும் மந்தாரமுமான காலநிலை காரணமாக பட்டம் ஏற்றுவது குடாநாட்டில் வெகுவாக குறைவடைந்திருப்பதைக் காணக்கூடியதாய் உள்ளது.

பொதுவாக பொங்கல் தினத்திற்கு சுமார் இரு வாரங்களிற்கு முன்னரே சிறுவர்கள், வயது வந்தவர்கள் என வயது வித்தியாசம் இன்றி பட்டம் பறக்கவிடுவதில் பலரும் பங்கு பற்றுவர்.

ஆனால், இம்முறை மிகவும் குறைந்த எண்ணிக்கையான சிலரே பட்டம் விடுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய காலநிலையும், காற்றுவீசும் அளவு குறைந்திருப்பதுமே இந்நிலைக்குக் காரணம் எனப் பட்டப் பிரியர்கள் பலரும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில், பலத்த காற்று வீசும் காலங்களில் குடாநாட்டில் விதவிதமான பட்டங்கள் ரீங்காரத்துடன், இரவு பகலாக பறந்ததனையும் பட்டப் பிரியர்கள் நினைவு கூறுகின்றனர். (03)

# வன்னி மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்ச்சியான மழையினால் பாதிப்பு

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக வன்னி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.'

குறிப்பாக, சமீபத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட திருவையாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எண்ணெய் ஆலைப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

இந்தப் பணிகளுக்கென முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதிலும் காலநிலை சீர்கேடு காரணமாக அபிவிருத்திக் கட்டட நிர்மாணப் பணிகள் தடைப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வன்னி மக்களுக்கென வழங்கப்பட்ட வீட்டுத் திட்டப் பணிகளும் மேற்கொள்ள முடியாது இருப்பதாக வீட்டுத் திட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் கட்டட நிர்மாணப் பணிகளுக்கான உள்ளீடுகளை (கல், மண், சீமெந்து) அதியுயர் விலையிலேயே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும், இதனால், மக்கள் பல இடர்பாடுகளையும் நஷ்டங்களையும் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரண சூழ்நிலையில் 18 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையான ஒரு லோட் கல் தற்போது 20 ஆயிரம் ரூபாவிற்கும், 3 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையான ஒரு லோட் மணல் 4 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனையாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான உயர் விலையில் பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுத்திட்டத்திற்கென நிறுவனங்களினால் வழங்கப்பட்ட குறிப்பிட்ட நிதியுதவியைக் கொண்டு உயர்ந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்து வீடுகளை அமைப்பது மக்களுக்குப் பாரிய சிரமத்தை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் மழை காரணமாக பல வீதிகள் முற்றாகச் சேதமடைந்திருப்பதால் மக்களின் நாளாந்த பணிகளும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# தென்னை நாற்று பண்ணையின் பணிகள் மீண்டும் ஆரம்பமாகின

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பன்னங்கண்டி மூன்றாம் வாய்க்காலில் அமைந்துள்ள நாற்றுமேடைப் பண்ணையில், பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பண்ணையில் 50 ஆயிரம் தென்னங்கன்றுகனள் நடப்பட்டு கன்றுகளும் வளரத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தென்னங்கன்றுகளை கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் தென்னைச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் விரும்பி வாங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தென்னங்கன்றுகளைப் பெறுவதற்காக செய்கையாளர்கள் முன்னரே தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்வியற் சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவினால் வெளியிடப்படும் கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என் தவராஜா எழுதிய ஆன்மீக வாழ்வியற் சிந்தனைகள் எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீவல்லிபுரநாதர் திருக்கல்யாண மண்டபத்தில் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர் எஸ். சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா, இலங்கை மின்சார சபையின் உதவிக் கணக்காளர் க. சுரேஸ்நேசன், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் செல்வி யசோதா பரம்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தன், யாழ். தபாலக தபால் அதிபர் நா. குகநேசன், திருகோணமலை நில அளவையாளர் வ. பிரேமதாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ் வில் நூலின் முதற்பிரதியை யாழ். இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் பே. நாகரத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் விபரம் 19ஆம் திகதி வெளியீடு

(வவுனியா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் எதிர்வரும் 19ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இம்முறை தேரதலில் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரதிநிதிகளே வேட்பாளர்களாக நிறுத்தப்படவுள்ளனர் என்றும், இதற்கான முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நியமிக்கப்பட்ட வன்னி மாவட்ட தேர்தல் குழுவால் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.


அத்துடன் வன்னி மாவட்ட தேர்தல் குழுவில் தம்முடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியாக் கிளைத் தலைவரான டேவிற் நாகநாதன் ஆகியோர் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, வன்னி மாவட்டத்தில் ஒரு நகர சபைக்கும் 12 பிரதேச சபைகளுக்கும் போட்டியிடுவதற்காக வேட்பாளர்கள்களத்தில் குதிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்துக்கல்லூரியின் கணனி அறையில் திருட்டு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த ஆண்டின் மூன்றாம் தவணை விடுமுறை காலத்தில் கணனிக்கூடத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடர்களினால் களவாடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த வருட மூன்றாம் தவணைக்கான விடுமுறை காலத்தின்போது கணனி ஆய்வு கூடத்திலிருந்து பல கணனிகளும் அவற்றுடன் தொடர்புடைய பிற சாதனங்களும் திருடப்பட்டிருப்பதுடன் பல்லூடாக கற்பித்தல் உபகரணங்களும் காணாமற்போயிருப்பதாகத் தெரிய வருகின்றது.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் இது தொடர்பாக பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் வாக்குமூல விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது. மேலும் இப்பாடசாலையில் இரவிலும், பகலிலும் காவலாலிகள் கடமையிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (03)






**வாழ்வகத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவு தினமும் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றபோது, நிறுவுனத் தலைவர் ரவீந்திர் தம்பதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும், வாழ்வக மாணவர்கள் கீதம் இசைப்பதையும் காணலாம். (54)**

# இரணைமடுக்குள நன்னீர் மீன்பிடிக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை

## சுமார் 80 குடும்பங்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் சுமார் 80 மீனவக் குடும்பங்கள் தொழிலுக்கான அனுமதி இதுவ்வரை கிடைக்காததன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போரின் முன்பு இந்த மக்கள் வாடிகளை அமைத்து வள்ளங்கள் மூலம் தொழிலை மேற்கொண்டு வந்ததாகவும், தற்போது கிளிநொச்சி மாவட்ட படைத்தரப்பினுடைய தலைமைச் செயலகம் மற்றும் விமான படையின் செய்றபாடுகள், குறித்த குளத்திற்கு அருகில் மேற்கொள்ளப்படுவதால் இதற்கான அனுமதி இராணுவத்தினரால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொள்வதற்கென 30 ஆயிரம் ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டு அது தொடர்பான வேலைத்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் இந்த குளத்தின் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் 80 குடும்பங்களும் தொழிலை மேற்கொள்வதற்கு இதுவரை அனுமதி கிடைக்காமல் இருப்பது வேதனை அளிப்பதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கான அனுமதி கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கும் படைத்தரப்பினருக்கும் கடிதம் அனுப்பியும் எந்த வித சாதகமான பதில்களும் தமக்கு கிடைக்கவில்லை என மீனவக் குடும்பங்கள் கவலை தெரிவிக்கின்றன.

எனவே இந்த விடயம் தொடர்பாக இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து அனுமதியை பெற்றுத்தரவேண்டும் என மீனவக் குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

### இரவில் ஒளிரமறுக்கும் மின் விளக்குகள்

(யாழ். நிருபர்)

காரைநகர் மேற்கு பிரதான வீதி, கிழக்கு வீதி என்பனவற்றில் பல இடங்களில் உள்ள மின் விளக்குகள் இரவில் ஒளிர்வதில்லை. இவற்றில் பல மின்விளக்குகள் செயலிழந்து சேதமடைந்துள்ளன.

பிரதான இடங்களில் உள்ள மின் கம்பங்களுக்குத் தேவையான மின் விளக்குகள் மற்றும் மின் உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க காரைநகர் அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது. இந்த மின் விளக்குகள் ஒளிரச் செய்வதில் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பிரதேச சபையே செலுத்த வேண்டுமென காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவர் க.சோமசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(தெல்லிப்பழை)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட (2010) அரச ஊழியர்களுக்கிடையேயான போட்டி முடிவுகள் கீழே தரப்படுகின்றன.

**பாடலாக்கம்**

1 ஆம் இடம் அ.ச. பாய்வா, 2 ஆம் இடம் செல்வி. க. குகநாயகி, 3 ஆம் இடம் செல்வி. வி. ஜீவரஜனி.

**கவிதையாக்கம்**

1 ஆம் இடம் உ. சுகாஜனன், 2 ஆம் இடம் அ.ச. பாயவ,

3 ஆம் இடம் வ. வசந்த குமார்.

**சிறுகதையாக்கம்**

1 ஆம் இடம் வ.வசந்த குமார், 2 ஆம் இடம் திருமதி ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், 3 ஆம் இடம் எஸ்.எல்.எம். அன்வர்.

குறுநாடகப் பிரதியாக்கத்தில் விருது பெற்றவர்கள்

1. சிறந்த கையெழுத்துப் பிரதி

திருமதி பேரின்பகுமார், மன்னார் நாநாட்டான் ம.வி.

2. சிறந்த மேடை வடிவமைப்பு

திரு. கே. பேரின்பகுமார், மன்னார். நானாட்டான் ம.வி.

3.சிறந்த இசையமைப்பு

திரு. கே சத்தியசீலன்.

4. சிறந்த நடிகை

திருமதி பேரின்பகுமார்.

5. சிறந்த துணை நடிகை

திருமதி வின்சன் ஜோர்ஜ்

மன்னார் மொட்டைக்கடை அ.த.க பாடசாலை

6. சிறந்த இயக்குநர்.

திருமதி பேரின்பகுமார்.

இவர்களுக்கான பரிசில்களை 23 .12. 2010 இல் கொழும்பு தேசிய நூதனசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டன. (44)

# இரண்டாம் பசுமைக் கிராமமாக தட்டுவன்கொட்டி தெரிவானது

(கிளிநொச்சி)

சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தின் தட்டுவன் கொட்டிக் கிராமம் இரண்டாம் பசுமைக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சினால் இக் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் குறித்த கிராமத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அத்துடன் சூழலை பேணும் முறை, வீட்டுத்தோட்டப் பயிற்செய்கை தொழில்நுட்பம் போன்ற விடயங்கள் பற்றி பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# கேபிள் இணைப்பு வழங்க நிறுவப்படும் புதிய தூண்கள்

(அச்சுவேலி)

யாழ். குடாநாட்டு கேபிள் தொலைக்காட்சிச் சேவை முகவர்கள் தமது கேபிள் இணைப்புக்களை நிறுவுவதற்காக புதிய கொங்கிறீற் தூண்களை வீதியோரங்களில் நாட்டி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு முன்னர் கேபிள் தொலைக்காட்சி கேபிள்கள் மின்சாரசபை மின்கம்பங்களினூடாகவே பெரும்பாலும் பொருத்தப்பட்டிருந்த நிலையில் அவற்றை அப்புறப் படுத்துமாறு இலங்கை மினசார சபையினர் அறிவித்திருந்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கைகளை கேபிள் தொலைக் காட்சி சேவை வழங்குனர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (03)

# கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும்

(காரைநகர்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரி கனிஸ்ர பிரிவின் கால்கோள் விழாவும், பொங்கல் விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கனிஸ்ரபிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் தி.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (50)



கோண்டாவில் ஆசிமடம் அரசடிப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபையினரால் இரண்டு கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபத்தை இங்கு காணலாம். இம் மண்டபம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துப் பாவனைக்கு விடப்படவிருக்கின்றது. (05)

# விண்ணப்பம் கோரல்

**போதனாசிரியர் பதவிகள்:**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சிக்களத்தில் உள்ள இலங்கை தொழில் நுட்பக் கல்விச்சேவையின் III (விசேட பதவியணி) இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட கீழ்க் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலத்திரனியல் போதனாசிரியர், கட்டிடத் தொழில் போதனாசிரியர், மோட்டார் பொறிநுட்ப போதனாசிரியர், மரவேலை போதனாசிரியர், குளிரேற்றல் மற்றும் வளிச்சராக்கல் போதனாசிரியர், தொழில்நுட்ப வரைதல் போதனாசிரியர், மின்தொழிற்துறை போதனாசிரியர், ஆங்கிலப் போதனாசிரியர், கணனித் தொழில் நுட்பவியல் போதனாசிரியர், விஞ்ஞான மற்றும் கணித போதனாசிரியர், வர்த்தகப் போதனாசிரியர், உலோக வேலை போதனாசிரியர்.

மேற்படி பதவிகளுக்கான கல்வி, வாண்மைத் தொழிற் தகைமைகள் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் என்பனவற்றை தினமுரசு காரியாலயத்தில் அல்லது ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம்.

♦♦♦

**தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா**

மொறட்டுவைப் பல கலைகழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப் ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறிக்கான கல்வித் தகைமை மற்றும் மாதிரிப் படிவம் ஆகியவற்றை தினமுரசு காரியாலயத்திலும், ஜனவ்ரி மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானிப் பத்திரிகையிலும் பார்வையிடலாம்.

♦♦♦

**பாடசாலை முகாமைத்துவப் பாடநெறி (தமிழ / சிங்களம்)**

தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடக வழங்கள் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா 2011-2012 பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வார இறுதி நாட்களைக் கற்றலுக்குப் பயன்படுத்தும் வகையில் 18 மாதங்களைக் கொண்ட இப்பாட நெறிக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உதவிப் பணிப்பாளர் நாயகம், கல்வித் தலைமைத்துவ விருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், மீபே சந்தி, பாதுக்கை என்னும் முகவரிக்கு 28.02.2011 ஆம் திகதி அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பப் படிவ இடது பக்க மூலையில் DSM 2011 எனக் குறிப்பிட வேண்டும்.

மேற்படி பாடநெறிக்கான தகுதிகள், விண்ணப்பம் அனுப்பும் முறை, மாதிரி விண்ணப் பப்படிவம் ஆகிய விபரங்களைத் தினமுரசு காரியாலயாத்தில் பார்வையிடலாம்.

## இன்றைய பலன்

(17.01.2011 திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி தை 03

இராகுகாலம்8.05- 9.35, சுபநேரம் 12.35 -2.05, துலாதசி காலை 6.45, மிருகசீரிடம் பி.இ 1.10, அமிர்த சித்தம், திரயோதசி பி.இரவு 6.00, பிரதோஷ விரதம், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.பிறந்ததினம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

**மேடம்:-** பாராட்டப்படல், மேலதிகாரிகள் உதவி, தொழிலில் மேன்மை.

**ரிஷபம்:-** தொழிலில் பிரச்சினை, குடும்பத்தில் சிக்கல், அதிக செலவு.

**மிதுனம் :-** புத்திரால் கவலை, நோய்வாய்ப்படல், வீண்செலவு.

**கடகம்:-** போட்டிகளில் தோல்வி, நினைத்த காரியத் தடை, நண்பர் விரோதம்.

**சிம்மம்:-** நன்பரால் உதவி, நல்ல செய்தி கிடைத்தல், பணவரவு.

**கன்னி :-** தொழிலால் லாபம், கடன் வசூல், பிரயாணம்.

**துலாம் :-** அரசபயம், பொருள் இழப்பு, அதிக செலவு.

**விருச்சிகம்:-** வாக்குவாதப்படல், குழப்பமடைதல், முரண்பாடு.

**தனுசு:-** உடல்நலப் பாதிப்பு, அதிக செலவு, மனக்கவலை.

**மகரம்:-** போட்டிகளில் வெற்றி, நினைத்த காரியச் சித்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**கும்பம் :-** பாராட்டப்படல், அதிக லாபம், மேலதிகாரி உதவி.

**மீனம்:-** மனச் சஞ்சலம், பொருளால் கவலை, அகாலபோசனம்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா 300 ஆயிரம் டொலர் நிதியுதவி



(கொழும்பு)

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்துக்காக அமெரிக்கா,300 ஆயிரம் டொலர்களை வழங்கவுள்ளது.

இதற்கான அறிவித்தலை இலங்கைக்காக அமெரிக்கத் தூதர் பெற்றீசியா பியூட்டினித்யஸ் விடுத்துள்ளார்.

இந்த உதவியின் மூலம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருட்களும் சேவைகளும் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கிழக்கின் மட்டகளப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்கள் உட்பட நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால், 10 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

27பேர் வரை உயிரிழந்தனர். பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

# மீனவர் மீதான தாக்குதல் ஆதாரத்தை நிரூபிக்கவும்

(கொழும்பு)



இலங்கை கடற்படை அதிகாரிகள் இந்திய மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை முடிந்தால் ஆதாரத்துடன் நிரூபிக்குமாறு புதிய கடற்படைத் தளபதி சோமதிலக திஸாநாயக்க இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கையின் 17ஆவது கடற்படைத் தளபதியாக சோமதிலக திஸாநாயக்க பாதுகாப்புச் செயலாளரால் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை விபத்தில் இலங்கையரும் பலி

(கொழும்பு)


இந்தியாவின் கேரள மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்திருப்பதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அசோக், பத்மநாதன் ஆகிய இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குமுளி காவல் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சபரிமலையில் மகரஜோதியைத் தரிசித்துவிட்டுத் திரும் பிக்கொண்டிருந்த பக்தர்கள் மலைப்பாதையில் வாகன விபத்து ஒன்றை அடுத்து ஏற்பட்ட நெரிசலில் சிக்கினர். வெள்ளிமுன்னிரவு 8 மணியள வில் புல்லுமேடு என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 107 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் மரணமாயிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# களனியில் மிளகாய்,தக்காளி விற்பனைக்குத் தடைவிதிப்பு

(கொழும்பு)



ஆளும் கட்சியின் அமைப்பளராக தாம் உள்ள களனிப் பிரதேசத்தில் பச்சை மிளகாய், தக்காளி, வெண்டிக்காய் என்பனவற்றை விற்பனை செய்யக் கூடாது என பொதுமக்கள் தொடர்புத்துறை அமைச்சர் மேர்வின் சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இந்த மரக்கறிகளை பொதுமக்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் பயிர்செய்து பயன்படுத்த வேண்டும் என அவர் கட்டளையிட்டுள்ளார். காலநிலை சீர்கேட்டினால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ள நிலையில் இந்த உத்தரவை கடுமையாக கடைப்பிடிக்கப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பொதுமக்கள் சுய உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் இது உதவும் என அவர் தெரிவித்தார்.

# இராணுவ மோட்டார் சைக்கிளுடன் சனத் சென்ற வாகனம் விபத்து



(கொழும்பு)

இலங்கையின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை சனத் ஜெயசூரிய பயணம் செய்த வாகனமும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இராணுவத்தினரும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறை எலியன்கட பிரதேசத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த 3 படையினரும் காயமடைந்துள்ளதாகவும் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்விபத்தில் சனத் ஜெயசூரிய எவ்வித காயமும் இன்றி மயிரிழையில் உயிர்தப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

# தொண்டு நிறுவனநிதியில் ஆடைத்தொழிற்சாலை திறப்பு

(கொழும்பு)

பிரெஞ்சு நாட்டின் தொண்டு நிறுவனத்தின் (SPF) நிதியுதவியுடன் அம்பாந்தோட்டைப் பகுதியில் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

ரங்கரி ஆடைத் தொழிற்சாலை எனப் பெயரிடப்பட்ட இந்த மையத்தினை அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினது புதல்வருமான நாமல் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் போது பிரரெஞ்சு நாட்டினது அலுவலாகள் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பிரீஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

குறிப்பிட்ட இந்த ஆடைத் தொழிற்சாலை 100 பேருக்கு முழுநேர வேலைவாய்ப்பினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐ.நாவின் இலங்கைப் பிரதிநிதி பிரிட்டன் தூதுவராக நியமனம்?

(கொழும்பு)



இலங்கை வெளிவிவகார அமைச்சில் அடிக்கடி மாற்றங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதோடு அங்குள்ள அதிகாரிகளுக்கு இடையிலான உட்பூசல்களும் இந்த நியமனங்களில் பெருத்த செல்வாக்கைச் செலுத்துகின்றன. வெளிவிவகார அமைச்சின் தற்போதைய மேலதிக செயலாளரான ரஞ்சித உயங்கொடவே சீனாவுக்கான புதிய தூதுவராக நியமனம் செய்யப்பட இருந்தார். ஆனால் உயங்கொடவுக்கும் அமைச்சை விட்டு வெளியேறுகின்ற வெளிநாட்டுச் செயலாளரான ரொமேஷ் ஜயசிங்கவுக்கும் இடையில் அத்தூதுவர் பதவிக்காக கடும் போட்டி நிலவியதாகவும் கடைசியில் ரொமேஷ் ஜயசிங்கவே வெற்றி பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே உயங்கொடவுக்கு ஆறுதல் பரிசாக ஜேர்மனிக்கான தூதுவர் பதவி வழங்கப்பட்டுள்ளது இவர் குணதிலக அமுனுகமவை அடுத்து நியமனம் ஆகிறார். இதேவேளை அமுனுகம இலங்கை வெளிநாட்டுச் செயலாளர் ஆகிறார்.

இதற்கிடையில் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக உள்ள பாலித கோஹனவே பிரித்தானியாவுக்கான அடுத்த உயர் ஸ்தானிகராகிறார் என்பது பெரும்பாலும் முடிவாகியுள்ளது. ஆனால் இவரது நியூயோர்க் பதவி வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது பற்றி இன்னமும் தீர்மானம் எடுக்கப்பட வில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குமாறு ஐ.நா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசரமாக உதவிகளை வழங்குமாறு ஐ.நா அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளிடம் இந்த கோரிக்கையை ஐ.நா.வின் மனிதாபிமான இணைப்பாளர் நில்பூனே விடுத்துள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நுளம்பு வலைகள், குடிநீர்,உணவு வகைகள் என்பன அவசரமாக தேவைப்படுகிறது.

அத்துடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக அத்தியவசிய தேவைகளை மேற்கொள்வதற்கு நிதியுதவியும் தேவைப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

எனவே உதவி வழங்கும் நாடுகள்,இயன்றவரை விரைவாக அவற்றைத் தந்துதவுமாறு,அவ்வாறு விரைவாக உதவிப் பொருட்கள் கிடைத்தால் அது மக்களுக்குப் பேருதவியாக அமையுமெனவும் அவர் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

# அதிகார துஷ்பிரயோகத்தில் உள்ளூராட்சிப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

சில உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் பிரதானிகள் தமது அதிகாரங்களை தகாத முறையில் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக தேர்தல் கண்காணிப்பு இயக்கமான பவ்வரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே இவ்வாறான சட்ட விரோத செற்பாட்டில் ஈடுபடும் குழுவினருக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த இயக்கத்தின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர்கள் தமது அதிகாரங்களை சரிவரப்பயன்படுத்துவார்கள் என தாம் நம்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தேர்தல் காலத்தில் பிரசார நடவடிக்கைகளுக்கென அரச வளங்களைப் பயன்படுத்துவதை அதிகாரிகள் தவிர்த்துக் கொள்வது சிறந்தது என ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

# பட்டம் வழங்கும் அதிகாரம்

(கொழும்பு)

பட்டம் வழங்கும் அதிகாரம் கொண்ட கல்வி நிறுவனமாக தேசிய வர்த்தக முகாமைத்துவ கல்வி நிறுவனத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் ஊடாக வருடத்துக்கு 10 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகாதோருக்கு மேற்படிப்பைத் தொடர்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் இந்த நிறுவனத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கிராமங்களிடையிலான குறுக்கறுப்பு நவாலியில் சிறப்பாக நடைபெற்றது



(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டுக்கான மாவட்ட செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, வீர, வீராங்கனைகளுக்கான கிராமங்களை குறுக்கறுத்தோடும் போட்டி நேற்று நடைபெற்றது.

இப்போட்டி காலை 8.30 மணியளவில் நவாலி மகாவித்தியால முன்றலில் ஆரம்பமாகியது. ஆண்களுக்கு 12 கிலோமீற்றர் தூரமும் பெண்களுக்கு எட்டுக் கிலோமீற்றர் தூரமும் கொண்டதாக இப்போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்களுக்கான போட்டியில், முதலாம் இடத்தை மருங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ரவி ரஜீகரன், இரண்டாம், மூன்றாமிடத்தை வேலனை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஞானேஸ்வரன், டினேஸ், நான்காமிடத்தை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ச. விஜயகுமார், ஐந்தாம், ஆறாம் இடங்களை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செ. ஜனகன், செ. ஜெயந்தன், ஏழாம் இடத்தை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஜெ. விஜயன், எட்டாம், ஒன்பதாமிடங்களை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இ. கோகுலராஜ், க. அமலன் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் முதலாம், இரண்டாமிடங்களை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஞா. சுமதி, இ. ஜனுஜா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் நவாலி மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ் மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எப்.எ.ரூபசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் கலந்து கொண்டார். மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி, நவாலி படை முகாமின் பொறுப்பதிகாரி சாஜன்மேஜர் பண்டாரா, கிராம அலுவலகர்களான நித்தியானந்தன் தனபாலரத்தினம் நிசாந்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் பிரதம விருந்தினர் மற்றும் படைத் தரப்பினரால் வழங்கப்பட்டன. (104)

## மாகாண மட்ட ஊர்சுற்றும் ஓட்டப்போட்டி

(கிளிநொச்சி)

ஊர் சுற்றும் ஓட்டப்போட்டியின் மாகாண மட்டப் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி கிளிநொச்சியில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கூட்டமொன்று கடந்த 14ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில், மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் உட்பட புடைத்தரப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதில் ஏற்கனவே நடத்தப்பட்ட ஊர்சுற்றும் ஓட்டப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)




## நாடு திரும்பினார் சச்சின்




(ஜொகன்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது காயமடைந்த நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் அடுத்த போட்டிகளில் விளையாடுவதைத் தவிர்த்து நாடு திரும்பியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கருக்கு ஏற்பட்டுள்ள காயத்தின் தன்மை குறித்து ஒன்றும் தெரியவில்லை என்றும் நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாடிய சச்சின் அதன் பின்னர் களத்தடுப்பில் ஈடுபடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மைதான நிர்மாணப்பணி பூர்த்தியடைவில்லையாம்!

(கொழும்பு)



உலகக் கிண்ணப் போட்டித் தொடர் இடம்பெறும் தெற்காசிய நாடுகள், சிலவற்றின் விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்படும் நடவடிக்கைகள் பூர்த்தியடையவில்லை யென சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் காமரூன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் முழு அளவில் இவை நிர்மாணிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்போட்டித் தொடர் சம்பந்தமான நான்கு மைதான நிர்மாண வேலைகள் பூர்த்தியடைவில்லை.

இவை ஒரு மாத காலத்தினுள் பூர்த்தியடைந்துவிடும் என நாம் நம்புகின்றோம் என்றார்.

## கொமன் வெல்த் போட்டியை நடத்த விளையாட்டுத்துறை பெரு முயற்சி

(கொழும்பு)

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடாத்துவதற்கு இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இது குறித்து மேலும் தெரியவருவதாவது, 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்தும் வாய்ப்பை இலங்கைக்குப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்வதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் ஆலோசனைக்கு இணங்க அம்பாந்தோட்டையை விளையாட்டு நகராகத் தெரிவு செய்வதற்கும் அது தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற ஆண்டு 2010ஆம் ஆண்டுக்கான கொமன் வெல்த் போட்டி இந்தியாவில் நடைபெற்றமையும், அதில், மைதான புரனமைப்பு உள்ளிட்ட பல விடங்களில் ஊழல் செய்யப்பட்டமையும், அது தொடர்பான விசாரணைகள் இற்றவரை நீடித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு ஓட்டத்தினால் இந்தியா திரில் வெற்றி


(ஜொகன்ஸ்பேர்க்)



தென்னாபிரிக்க அணிக்கெதிரான பரபரப்பான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றது.

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக ஜொகன்ஸ்பேர்க் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடத்தீர்மானத்தது. இதற்கமைய களமிறங்கிய இந்திய அணி, 47. 2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவராஜ்சிங் 53, டோனி 38, சச்சின் 24, ஹோலி 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொற்சோவ் நான்கு, ஸ்ரேயின், மோர்க்கல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்கஅணி 43 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்று, ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. இதில் அணித் தலைவர் ஸ்மித் 77 ஓட்டங்களைப் பெற்றார். இவர் 48 ஓட்டங்களைப் பெற்றவேளை, ஒரு நாள் போட்டியில் 6000 ஓட்டங்களைக் கடந்தார். மற்றும் மில்லர் 27, சி.எல். க்ரம் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முனாப் பட்டேல் நான்கு, சகீர்கான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக முனாப் பட்டேல் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளனர்.

## பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்கு 134



(வெலிங்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணி, அதன் முதல் இனிங்சில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் வெலிங்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து தொடர்ந்தது. அணித் தலைவர் விட்டோரியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து நியூசிலாந்து அணி 356 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விட்டோரி 110, ரெய்லர் 78, யூங் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமர்குல் நான்கு, தன்வீர் அகமட் மூன்று, அப்துல் ரஹ்மான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் தபீக் உமர் 70 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் அசார் அலி 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளார். பந்து வீச்சில் விட்டோரி, சௌத்தி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## வட்சனின் சிறப்பான ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணி அபார வெற்றி



(மெல்போர்ன்)

வட்சனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய இங்கிலாந்து அணி 49.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கெவின் பீற்றர்சன் 78, அணித் தலைவர் ஸ்ரோஸ் 63, டேவிட் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லீ, ஜோன்சன், டேவிட் ஹசி, ஸ்மித் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, 49.1 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வட்சன் ஆட்டமிழக்காது நான்கு சிக்சர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 161 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹடின் 39, மைக்கல் கிளார்க் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிறஸ்னன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக வட்சன் தெரிவானார்.

# துனீசிய நாட்டுச் சிறையில் தீ விபத்து 42 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு



துனீசியாவின் மொனாஸ்திர் சிறையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், அங்கிருந்த 42 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. தெற்கு துனீசியாவிலிருந்து 160 கி.மீ தூரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

இனந்தெரியாத நபர் ஒருவரினால் குறித்த சிறையை ஒட்டிய விடுதியிலிருந்த படுக்கைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் அங்கிருந்த 90 ற்கு மேற்பட்டோர் தம்மை காப்பாற்றிக்கொள்வதற்காக அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்துள்ளனர். சிலர் தீயில் அகப்பட்ட நபர்களை காப்பாற்ற முனைந்த போது அவர்களும் தீயில் அகப்பட்டுக்கொண்டனர்.

சிலர் மூச்சுத்திணறலுருக்கு உட்பட்டு அவதியுற்றனர். சிறைக்கதவுகளை திறந்துகொண்டு வெளியில் வர முனைந்தவர்கள் மீது துப்பாக்கி பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து சிறையிலேயே 42 பேர் உயிரிழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

துனீசியாவில் அண்மைக்காலமாக அதிகரித்து வந்த கலவரங்களை அடுத்து அந்நாட்டு ஜனாதிபதி பென் அலி, அங்கிருந்து வெளியேறி சவுதியில் தஞ்சமடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. 21 ஆம் நூற்றாண்டின் முதல் மக்கள் புரட்சியாக, துனீசியா மக்கள் புரட்சி வெடித்துள்ளது.

இதேவேளை, அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட இளைஞர்கள் மீதும் தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. நேற்று இவ்வாறான தாக்குதலில் ஓர் இளைஞர் கொல்லப்பட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# கணனி ஆவணங்களை அழிக்க வருகிறது காமசூத்ர வைரஸ்

(லண்டன்)

கடந்த 2006 ஆம் ஆண்டு வந்த காமசூத்ரா என்றழைக்கப்பட்ட கணனி வைரஸ் கிருமிகளால் ஏராளமான கணனிகள் செயல் இழந்தன. அது போன்ற வைரஸ் மீண்டும் அதேபெய ரில் வந்துள்ளதாக இத்துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வந்துள்ள வைரஸ் கிருமி Real kamasutra.pps.exe என்ற பெயரில் வந்துள்ளது என்றும், இதுபோன்ற வைரஸ் கிருமிகள் பெரும்பாலும் பதிவிறக்கம் செய்யும் பைல்களை மட்டுமே அழிக்க கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.


எனவே, கணனியில் இதுபோன்ற வைரஸ் கிருமிகளை அழிக்க கூடிய மென்பொருட்களை அமைத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல் தங்களுடைய பதிவுகளில் காணப்படும் வைரஸ்களை அழித்துவிட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளனர் இத் துறை வல்லுநர்கள்

# சர்வதேசத்தில் மிகப்பெரிய சக்தியாக இந்தியா உருவெடுத்து வருகின்றதாம்

## என்கிறது அமெரிக்கா

(வொஷிங்டன்)

சர்வதேச அரங்கில் இந்தியா மிகப் பெரிய சக்தியாக உருவெடுத்து வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில், இந்தியாவுடனான நட்பை, மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபடும் என, அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி, அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாம் டொனிலோன் கூறியதாவது -

சர்வதேச அரங்கில், இந்தியா மிகப் பெரிய சக்தியாக உருவெடுத்து வருவது, அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடு என்ற முறையில், இதை நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவுடனான நட்பை, மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

இந்தியாவுடன் மட்டுமல்லாமல், தென் கொரியா, சீனா போன்ற நாடுகளுடனும் உறவை பலப்படுத்த வேண்டும் என, அமெரிக்கா விரும்புகிறது. கடந்த நவம்பரில், அமெரிக்க அதிபர் ஒபாமா, இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்தியாவுடனான உறவை அதிகரிப்பதற்கான முயற்சியில் ஒரு பகுதி தான் இது. இவ்வாறு டாம் டொனிலோன் கூறினார்.

# 2 ஆவது குழந்தைக்குத் தாயானதால் பேராசிரியர் பதவியிலிருந்து நீக்கம்

(பீஜிங்)

சீனப் பேராசி ரியர் ஒருவ ரின் மனைவி இரண்டாவது குழந்தை பெற்றதால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து அவர் நீதிமன்றத்தில் ஒரு குழந்தைக் கொள்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

சீன இளைஞர் பல்கலைக்கழகத்தில் அரசியல் பாடம் எடுக்கும் துணை பேராசிரியராக இருந்தவர் யாங் ஜிஜு. அவரது மனைவி கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாவது குழந்தை பெற்றெடுத்தார். இந்தத் தகவல் தெரியவந்ததால் அதிகாரிகள் அவரை கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதவி நீக்கம் செய்தனர்.

இதையடுத்து தற்போது யாங் சீன நீதிமன்றத்தில் ஒரு குழந்தைக் கொள்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். அதில் அவர் இந்தக் கொள்கையை முழுவதுமாக நீக்காவிட்டாலும், அதில் சில மாற்றங்களாவது கொண்டு வர வேண்டும் என்று கூறியுள்ளார்.

உலகளவில் சீன மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ளது. மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவதால், சீன அரசு மக்கள் தொகையைக் குறைக்கும் பொருட்டு ஒரு குழந்தைக் கொள்கையை கொண்டு வந்தது. அதன்படி ஒரு தம்பதி ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கிடையே, இரண்டாவது குழந்தைக்குத் தந்தையாகியுள்ள யாங்கிற்கு குடும்பக் கட்டுப்பாட்டு வாரியம் ரூபா 16 லட்சத்து 34 ஆயிரத்து 908 அபராதம் விதித்துள்ளது.




# ஆப்கானில் பெண்கள் கல்விக்கு தலிபான்கள் தடையில்லையாம்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(லண்டன்)

ஆப்கானில் பெண்கள் பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்கக் கூடாதென்ற தமது முடிவை தலிபான்கள் கைவிட்டுள்ளதாக அந்நாட்டின் கல்வியமைச்சர் பருக் வர்தாக் தெரிவித்தார்.

தற்போது ஆப்கானில் பாடசாலைகளுக்கு பெண்பிள்ளைகள் சென்று கல்வி கற்று வருவதாகவும், அதனை தலிபான்கள் எதிர்ப்பதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

லண்டனில் இடம்பெற்ற கல்வி சம்பந்தமான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆப்கானில் விரைவில் சமாதானமான சூழ்நிலை ஒன்று உருவாகுமென வும், இது தொடர்பாக எதிர்த்தரப்புகளுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும், எனினும் அடிப்படை மனித உரிமை, மற்றும் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக எவ்வித உடன்பாடும் ஏற்பட வில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை பெண்கள், பாடசாலைகளில் கல்வி பயில்வதற்கு தடையில்லை என்ற கல்வியமைச்சரின் கருத்துத் தொடர்பாக தலிபான்கள் மறுப்பையோ, எதிர்ப்பையோ வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பிலிப்பைன்சில் 47 பேர் உயிரிழப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த இரண்டு வாரங்களாக பெய்த பலத்த மழையால் 47 பேர் பலியாகியுள்ளனர். மேற்கத்திய நாடுகளில் பனிப்புயல் வீசிக்கொண்டிருக்கும் வேளையில், பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு வாரமாக பெய்யும் பலத்த மழையால் பிலிப்பைன்ஸ் நாட்டின் பல மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால், 18 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 47 பேர் பலியாகியுள்ளனர். எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

# பிரேசிலில் பலியானோர் தொகை 500 இற்கும் மேல் எனத் தகவல்

(ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவுக்கு பலியானோர் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்தது. நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லை.

எனவே, பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. தென் அமெரிக்க நாடான பிரேசிலில் உள்ளது டெரர்சோபோலிஸ் என்ற நகரம். தலைநகர் ரியோடி ஜெனிரோவில் இருந்து 65 கி.மீ தொலைவில் இருக்கும் அது மலைப்பாங்கான இடம் அங்கு இந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிகமாக கடந்த புதன்கிழமை 24 மணிநேரத்தில் 26 சென்ரிமீற்றர் மழை கொட்டித்தீர்த்தது.

இதனால் மலையில் நிலச்சரிவு ஏற்பட்டு செம்மண் கலந்த வெள்ளம் தரையை நோக்கிப் பாய்ந்தது. கட்டாற்று வெள்ளத்தில் மரங்கள், பாறைகள் உருண்டு கீழ் நோக்க வந்தன. மலை அடிவாரங்களில் ஏராளமான வீடுகள் இருந்தன. அவற்றில் பெரும் பாலானவை முறையான அஸ்திவாரம் அமைக்காமல் மரச் சட்டங்கள், 'பிளைவுட்' பயன்படுத்தி கட்டப்பட்டவை. மலையை அரித்துக் கொண்டு கீழிறங்கிய வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. இதில் நேற்று முன்தினம் வரை 500 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மழை நின்ற பிறகும் செம்மண் சகதி, பல அடி உயரத்துக்கு படிந்துள்ளதால், அதற்குள் ஏராளமானோர் உயிருடன் சமாதி ஆகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. பல பகுதிகளில் நிலச்சரிவு நீடிக்கிறது. அதில் பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்து வருகின்றன. டெரசோபோலிஸ் நகரில் மின்சாரம், தொலைத் தொடர்பு, போக்குவரத்து அடியோடு துண்டிக்கப்பட்டது. மழை நின்ற பிறகும் மிரட்டும் இடி, மின்னல், வெளிச்சத்தில் வெள்ளத்தில் மிதக்கும் வீடுகள், கால்நடைகள் மரங்கள் என் பனவற்றைக் காணக்கூடியதாகவுள்ளன.

# காஷ்மீர் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள ராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்படும்

## உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை



(புதுடில்லி)

புதுடில்லி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள படை வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை தெரிவித்தார்.

பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் எல்லையில் பாதுகாப்புக்குக் குவிக்கப்பட்டுள்ள படைகளின் எண்ணிக்கையில் கணிசமாகத் திரும்பப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் தகவல் ஆணையம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மனித உரிமை ஆணையம், குழந்தைகள் உரிமைக் கவுன்சில் உள்ளிட்டவை ஏற்படுத்தப்படவுள்ளன.

இவைஅனைத்தும் ஏற்படுத்துவதற்கான முயற்சியில் மாநில அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இதன் மூலம் வெளிப்படையான, நம்பகத்தன்மை ஏற்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது. ஜம்மு காஷ்மீர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பது உண்மைதான். இதைப் போக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஓராண்டுக்குள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நிறுவனங்களில் ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை-

ஜம்மு காஷ்மீர் இராணுவத்தினர் எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது என்று இராணுவத் தலைமை தளபதி வி.கே.சிங் தெரிவித்தார்.

இப்போதைக்கு படை வீரர்களைக் குறைப்பதற்கான அவசியம் இல்லை என்றும் அவர் கூறினார்.

படை வீரர்கள் குறைக்கப்பட்டால், பணியில் இருப்பவர்களுக்கு சுமை அதிகரிக்கும.

எனவேதான் படை குறைப்பு தேவையில்லை என்று கருதுவதாக அவர் கூறினார்.

# வீதிகளை நிர்மாணிப்பதற்கு உலக வங்கி 6800 கோடி கடன்



(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள கிராமப்பகுதிகளில் வீதிகளை அமைக்க உலக வங்கி ரூ. 6,800 கோடி கடன் அளிக்க முன் வந்துள்ளது. இத்தகவலை இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள உலக வங்கித் தலைவர் ரிச்சர்ட் ஜோயெலிக் தெரிவித்தார்.

புதுடில்லியில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியை நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேசிய அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத் தகவலைத் தெரிவித்தார்.

கிராமப்பகுதிகளில் அனைத்து தட்ப, வெப்ப நிலைகளையும் தாங்கி நிற்கும் வீதிகளை அமைக்க இந்தக் கடன் அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். பொருளாதார ரீதியில் பின்தங்கிய, மலைப் பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களில் வீதி வசதி ஏற்படுத்துவதற்காக இந்த கடனுதவி அளிக்கப்படுகிறது. உலக வங்கி கடனுதவிக்கு ஒப்புதல் அளித்த மிகப்பெரிய வீதி மேம்பாட்டு திட்டம் இதுவாகும். இதற்கான ஒப்பந்தம் பிரதமர் வீதி மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும்.

# தமிழக சட்டசபைத் தேர்தலில் பா.ஜனதா தனித்துப் போட்டி

(சென்னை)



தமிழக சட்டசபை தேர்தலில் பா. ஜனதா தனித்து போட்டியிடும் என்று அகில இந்தியத் தலைவர் நிதின்கட்கரி கூறி உள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் பா.ஜனதாவின் நிலைப்பாடு குறித்து அகில இந்திய செயலாளர் முரளிதர் ராவ் கடந்த சில தினங்களுக்கு முன்பு சென்னையில் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் அகில இந்திய தலைவர் நிதின்கட்கரி டெல்லியில் 5 மாநிலங்களில் நடைபெறும் சட்டசபைத் தேர்தல் குறித்து கூறும்போது, தமிழ் நாட்டில் பா.ஜனதா தனித்து போட்டியிடும் என்று கூறினார். வருகிற 29ஆம் திகதி தாமரை யாத்திரை நிறைவு விழாவில் பங்கேற்க சென்னை வரும்போது இது தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்போவதாகக் கூறி உள்ளார்.

# மீண்டும் உயர்ந்தது பெற்றோல் விலை

இந்தியாவில் பெற்றோலின் விலை லீட்டருக்கு 2.96 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் - டீசல் விலைகளை பெற்றோல் நிறுவனங்களே கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப உயர்த்திக்கொள்ளலாம் என மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இதையடுத்து சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரும் போதெல்லாம் எண்ணெய் நிறுவனங்களும் பெற்றோலின் விலையை உயர்த்திவருகின்றன ஏற்கனவே கடந்த மாதம் 15 திகதி பெற்றோலின் விலை லீட்டருக்கு 2.96 ரூபாவாக உயர்த்தினர். ஒரு மாதத்துக்குள் மீண்டும் விலையை உயர்த்தி உள்ளனர்.

இதில் இந்தியன் ஓயில் நிறுவனம் லீட்டருக்கு 2ரூ 50சதமாகவும் இந்துஸ்தான் ஓயில் நிறுவனம் லீட்டருக்கு 2ரூபா 54 சதமும் பாரத் பெற்றோலிய நிறுவனம் 2 ரூபா 53 சதமாகவும் உயர்த்தியுள்ளனர். இவ்வாறு பெற்றோலின் விலை அடிக்கடி உயர்த்தப்படுவதானது பொது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அத்துடன் இந்த விலையுயர்வை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என பாரதிய ஜனதா கட்சி மற்றும் இடதுசாரிக்கட்சிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக பாரதீய ஜனதா செய்தி தொடர்பாளர் பிரகர் ஜபேத்கர் தெரிவிக்கையில்,

கடந்த 6 மாதத்தில் மட்டும் 7 தடவை பெற்றோல் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். ஒரு லீட்டர் பெற்றோலின் உற்பதிச் செலவு 30 ரூபாய் ஆகிறது. ஆனால 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது 100 சதவீதம் வரிவிதிக்கப்படுகிறது. எனவே பெற்றோல் விலை உயர்வை திரும்பப் பெறவேண்டும். என அவர் தெரிவித்தார்.

# சட்டசபைத் தேர்தலில் தி.மு.க.வை தோற்கடிக்க அ.தி.மு.க-தே.மு.க.கூட்டணி அமைய வேண்டும்

## துக்ளக் ஆசிரியர் சோ





(சென்னை)

வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடிக்க அ.தி.மு.க - தே.மு.தி.க கூட்டணி அமைய வேண்டும் என்று துக்ளக் வார இதழின் ஆசிரியர் சோ ராமசாமி தெரிவித்தார்.

சென்னை மியூசிக் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற துக்ளக் வார இதழின் 41ஆவது ஆண்டு விழாவில் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அவர் பேசியதாவது-


நாட்டில் நெருக்கடி நிலை அமுலில இருந்தபோது, ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் இந்திரா காந்தியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற உணர்வு இருந்தது. அதுபோன்ற நிலை இப்போது தமிழகத்தில் உள்ளது. வரும் பேரவைத் தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடித்தால்தான் நாட்டையே காப்பாற்ற முடியும். அது தமிழக மக்களின் கைகளில்தான் உள்ளது. நாட்டின் மீது அக்கறை உள்ளவர்கள் வாக்களித்தால் கண்டிப்பாக தி.மு.க. தோற்கும். தி.மு.க.வைத் தோற்கடிக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவால் மட்டுமே முடியும். அதற்கு வலுவான கூட்டணி அமைய வேண்டும். அ.தி.மு.க.வுடன் தே.மு.தி.க. கூட்டணி அமைக்க வேண்டும். தி.மு.க.வால் விஜயகாந்தும் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது திருமண மண்டபம் இடிக்கப்பட்டது. பொறியியல் கல்லூரிக்கு இடையூறு செய்தார்கள். தி.மு.க.வைத் தோற்கடிக்கும் கடமையில் இருந்து அவர் தவறக் கூடாது. தே.மு.தி.க தனித்துப் போட்டியிட்டால் எதனையும் சாதிக்க முடியாது.

தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தை ஒரு குடும்பமே கொள்ளையடிக்கிறது. இதுபோன்ற நிலை இந்தியாவில் எங்கும் இல்லை.

திரைப்படத்துறை முதல்வரின் குடும்பத்தின் பிடிக்குள் சென்று விட்டது. கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்களின் தயவு இல்லாமல் எந்தப் படத்தையும் திரையிட முடியாது என்று உச்சத்தில் உள்ள நடிகர்களே கூறுகின்றனர்.

பிரதமர் மன்மோகன் சிங் நேர்மையைக் கொலை செய்து புதைத்து விட்டார். 2 ஜி அலைக்கற்றை ஊழலில் ஆ.ராசாவை அவரால் தட்டிக்கேட்க முடிய வில்லை. பிரதமர் பதவிக்காக நேர்மை, நாணயம் எல்லாவற்றையும் துறந்து வ்ட்டார். இனி 2 ஜி அலைக்கற்றை ஊழலை மன்மோகன் சிங்கும், சோனியாவும் பார்த்துக கொள்வார்கள் என்றார்.

# கருணாநிதியுடன் வீரப்பமொய்லி சந்திப்பு தி.மு.க-காங்கிரஸ் உறவு குறித்துப் பேச்சு







(சென்னை)

முதல்வர் கருணாநிதியை மத்திய சட்ட அமைச்சர் வீரப்பமொய்லி திடீரென சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில், காங். - தி.மு.க., உறவு மற்றும் ஸ்பெக்ட்ரம் விவகாரம் குறித்து முக்கிய பேச்சு நடந்துள்ளது. மத்திய சட்ட அமைச்சர் வீரப்பமொய்லி நேற்று முன்தினம், மாநாடு ஒன்றில் பங்கேற்க சென்னை வந்திருந்தார். மாநாட்டில் பங்கேற்ற பின், முதல்வர் கருணாநிதியை திடீரென நேரில் சந்தித்து பேசினார். முதல்வரின் சி.ஐ.டி., கொலனி இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. இருவரும் 15 நிமிடங்கள் தனியாகப் பேசிக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், தி.மு.க.-காங்., இடையிலான உறவு குறித்த காங்., மேலிடத்தின் எண்ணங்களை மொய்லி பகிர்ந்து கொண்டதாக தெரிகிறது. ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் சட்டத்துறையின் நடவடிக்கைகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை குறித்தும், தமிழகத்தில் வரும் சட்டசபை தேர்தலுக்கு முன்னேற்பாடு நடவடிககைகள் மேற்கொள்வது குறித்தும் பேசியதாக காங்., வட்டாரங்கள் தெரிவித்தன.


திரும்பிய அமைதியை
விரும்பிய திசை நோக்கி நகர்த்தி செல்ல...
சூரியப்பொங்கல்!
எங்கே?
யாழ் துரையப்பா விளையாட்டரங்கு
எப்போது?
17.01.2011 திங்கட்கிழமை
காலை 10.00 மணிக்கு
அலையெனத்திரண்டு அனைவரும் வருக!..
(C/399)

# இணைந்த கரங்களின் உயர்ந்த பணிகள் தொடரும்...





## பிரித்தானியா அரசு விடுத்த பயண எச்சரிக்கையை இலங்கை அரசு மறுத்துள்ளது



பிரித்தானிய அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் புலி அச்சுறுத்தல் காணப்படுவதாக வெளியாகும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா அண்மையில் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையில் பொதுவான பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. பயண எச்சரிக்கை விடுப்பதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்திருக்க வேண்டுமென பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பொதுவாக பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ள அனர்த்தம் தொடர்பில் விடுக்கப்பட்ட பயண எச்சரிக்கையின் ஒரு பகுதியில் பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், இலங்கையில் தொடர்ச்சியாக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருவதாக பிரித்தானியா சுட்டிக்காட்டியுள்ளது. தாக்குதல் அபாயத்தை முற்று முழுதாக நிராகரிக்க முடியாதென தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், இலங்கையில் எந்தவிதமான பயங்கரவாத அச்சுறுத்தலும் கிடையாது என பிரதமர் தெரிவித்துள்ளார். சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சர்வதேச நாடுகளை பிழையான வழியில் நடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகள் பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து எந்தவிதமான முறைப்பாடுகளையும் தெரிவிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுவான பாதுகாப்பு நிலைமைகளில் எவ்வித பாதிப்பும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வெள்ளப்பாதிப்புக்களுக்கு.....

பிட்டுள்ளார்.

அதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றி இருப்பதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கிழக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற முகாம்களுக்கு மருத்துவக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கூறியிருப்பதாகவும் இச் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கினால் 37 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதுடன், 12 பேர் காணாமற் போயிருப்பதாகவும் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பல இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி இருக்கின்றன.

இந்த வெள்ளப் பெருக்கினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது சவால் நிறைந்த பணியாக இருப்பதாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டர் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேவேளை, வெள்ளப் பெருக்கினால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு போதிய உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என யுனிசெப் நிறுவனத்தின் பேச்சாளர் மேர்வின் பிளிச்ரர் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைப் பெறும் வகையில் யுனிசெப் நிறுவனம் பல மில்லியன் லீற்றர் குடிநீரை இதுவரை சுத்திகரித்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

### தமிழ் மக்கள்...

நேற்று மாலை கேரதீவு-சங்குப்பிட்டிப் பாலத்தை ஜனாதிபதி வைபவ ரீதியாகத் திறந்து வைத்த பின்னர் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மாலை கேரதீவு-சங்குப்பிட்டிப் பாலத்தை ஜனாதிபதி வைபவ ரீதியாகத் திறந்து வைத்த பின்னர் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்மக்கள் எதிர்பார்க்கப்படும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு எமது அரசு தயாராக இருக்கிறது. தமிழ்மக்கள் எவற்றையெல்லாம் எதிர்பார்க்கிறார்களோ அவற்றையெல்லாம் எமது அரசு நிறைவேற்றி வருகிறது.

வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் வீதி அபிவிருத்தி, கல்வி, வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் தொடர்ச்சியாக சிறப்பான முறையில் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பாலம் அமைக்கப்படுவதற்காக நீண்டகாலமாக அடிக்கற்கள் நாட்டப்பட்டிருந்த போதிலும் பாலத்தின் வேலைகள் நடைபெறாத நிலையில் எமது அரசின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான பணிகளால் இப்பாலம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாள் நிச்சயம் அனைவருக்கும் ஒரு சந்தோசமான நாளாகும் என்பதுடன், வடபகுதி மக்களுக்கு மட்டுமல்ல இந்நாட்டிலுள்ள அனைவருக்கும் சந்தோசத்தை தரும் நிகழ்வாக அமைந்துள்ளது.

இதுவரையில் ஏ-9 பாதை தான் வடபகுதிக்கான ஒரேயொரு தரைவழிப் பாதையாக இருந்தது. ஆனால், தற்போது ஏ-32 பாதையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், இப்பாதையூடாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான ஏ-32 வழிப் பயணத்தின் போது 87 கிலோ மீற்றர் தூரம் குறைவாகின்றதையும் ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மற்றுமொரு அபிவிருத்திப் பணியாகவே இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது அரசின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம் என்பதுடன், நாம் சொல்வதையே செய்கின்றோம், செய்வதையே சொல்கின்றோம் என்றும் தெரிவித்த ஜனாதிபதி அவர்கள், வசதி குறைந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நீங்கள் யாவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இங்கு வருகை தந்து உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்ளும் அதேவேளை, உங்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களுடன் நல்லதொரு சுபீட்சமான வளமான எதிர்காலம் மலரவும் வாழ்த்துகிறோம் என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் ஆரம்பத்தில் அங்கு வருகை தந்த ஜனாதிபதி அவர்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திசிறி ஆகியோர் வரவேற்றனர்.

மேற்படி பாலத்தின் பெயர்ப்பலகையினை ஜனாதிபதி திரை நீக்கம் செய்து வைத்ததுடன், பாலத்திற்கான நாடாவை வெட்டி அதனூடான போக்குவரத்தையும் சம்பிரதாயமாக தொடக்கி வைத்தார்.

பாலத்தினூடாகப் பயணித்த ஜனாதிபதி உட்பட்ட பிரமுகர்கள் கேரதீவுப் பகுதியில் அமைக்கப்பட்ட சிறப்பு அரங்கத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வரவேற்புரையாற்றும் போது, கடந்த காலங்களில் எமது மக்கள் அனுபவித்து வந்த துன்ப துயரங்கள் எல்லாம் தற்போது சூரியனைக் கண்ட பனிபோல அகன்று விட்டன.

இந்நிலையினை ஏற்படுத்தித் தந்த ஜனாதிபதி அவர்களுக்கு மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் மகாதேவ தாம்போதி என்ற இந்தப் பாலம் யாழ். மாவட்ட மக்களுக்கு பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுக்கும் உறவுப் பாலமாக அமையும் என்றும் மக்களின் நீண்டகால கனவு இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் தெரிவித்தார்.

288 மீற்றர் நீளமான சங்குப்பிட்டிப் பாலம் 7 மீற்றர் அகலம் உடையதுடன் ஆயிரத்து 32 மில்லியன் ரூபா செலவில் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்டின் (உதயன்), வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும் பணிப்பாளருமான பிரேமசிறி மற்றும் துறை சார்ந்த உயர் பிரதிநிதிகளும், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி, யாழ். மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

### கோவில் கிணற்றில்....

காணாமல் போனதாகவும், நேற்று அதிகாலை 6.00 மணியளவிலேயே இவரது சடலம் குறித்த கிணற்றில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோப்பாய் பொலிஸாரினால் நீதிவான் முன்னிலையில் குறித்த பெண்ணின் சடலம் வெளியே எடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டது. (பா)


### நாவற்குழியில்....

சேர்ந்த அந்தோனி வேதநாயகம் (வயது - 57) என்பவரே பலியானார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கொழும்பில் இரு ந்து (11ஆம் பக்கம் பார்க்க)

பயணிகளை ஏற்றிவந்த தனியார் பஸ் வண்டி நாவற் குழிச் சந்தியிலிருந்து கைதடி வீதியில் சிறிது தூரத்தில் துவிச் சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த மேற்படி சிற்றூழியர்மீது மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் சிற்றூழியர் அவ்விடத்திலேயே பலியானார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)



நாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# வெள்ள அனர்த்தத்தால் அதிகரிக்கும் மரணங்கள்; சடலங்களை அடக்கம் செய்வதில் பெரும் சிரமம்



(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நாடு முழுவதும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கூடுதலான உயிரிழப்புகள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 10 பேரும் உயிரிழந்துள்ள நிலையில், இம்மாவட்டங்களில் 4 பேர் காணாமல் போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக சடலங்களை அடக்கம் செய்வதில் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மயானங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் சடலங்களை அடக்கம் செய்வதில் அல்லது தகனம் செய்வதில் மாற்று வழிகளைத் தேட வேண்டியுள்ளதாக மக்கள் கூறுகின்றார்கள்.

# அவுஸ். வெள்ள அனர்த்தம் இலங்கையருக்குப் பாதிப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ள அனர்த்தம் காரணமாக இலங்கையர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்ரேலியாவில் வாழும் இலங்கையர்களின் பல வீடுகள் வெள்ளத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளன என அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அவுஸ்ரேலிய




வெள்ள நிலைமையில் தற்போது தணிவு ஏற்பட்டிருந்தாலும் சேறுகளை முற்றாக இல்லாமல் செய்வதற்கு 3 மாத காலமேனும் தேவைப்படுமென அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையை சேர்ந்த சகோதரர்கள் இருவர் இத்தாலியில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்களின் ஆதரவினை இலங்கை அரசுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் பெற்றுக் கொடுப்பதற்காக முன்னின்று உழைத்தவரின் சகோதரனே கொஸ்வத்தை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டார் என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இத்தாலியிலிருந்து அண்மையில் நாடு திரும்பியிருந்த கொழும்பை அண்டிய பிரதேசமான கொஸ்வத்தை, முகாந்திரம் மாவத்தையைச் சேர்ந்த இந்திரஜித் (வயது - 35) என்பவரின் கொலை தொடர்பான விசாரணைகளின் போதே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவரின் சகோதரரான கித்சிறி ராஜபக்ஷ என்பவர் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்தாலியில் பணி புரியும் இவர் விடுமுறையில் வந்திருந்த போதே கொலை செய்யப்பட்டார். இவர் இத்தாலியில் வாழும் இலங்கை மக்களின் ஆதரவை இலங்கை அரசுக்கும் இராணுவத்துக்கும் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தவராவார்.

தற்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ள இவரது சகோதரனின் கொலை தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவரின் கொலையுடன் பாதாள உலகத்தினர் தொடர்பு இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளன எனக் கூறப்படுகிறது. இவரது வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை

(கொழும்பு)

யாழ். சங்குப்பிட்டி பாலத் திறப்பு விழாவில் கலந்துகொள்வதற்கு தனக்கு அழைப்பிதழ் கிடைக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட யாழ். சங்குப்பிட்டி பாலத் திறப்பு விழாவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏன் கலந்துகொள்ளவில்லை என வினவியதற்கே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் கிடைத்ததா? என தனக்கு எதுவும் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

அழைப்பிதழ் கிடைத்திருந்தால் திறப்பு விழாவில் கலந்துகொண்டிருப்பீர்களா என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரனிடம் வினவியதற்கு, அழைப்பிதழ் கிடைத்திருந்தால் கலந்துகொள்வதா? இல்லையா? என தீர்மானித்திருப்போம் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். சங்குப்பிட்டி பாலத்தை திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

## இனப்பிரச்சினைக்கு....

இடம்பெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது தொடர்பில் விரிவான முறையில் ஆராயப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இருதரப்பினருக்கும் இடையில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், காணாமல்போனவர்களுடைய பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை என்பன குறித்தும் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்ட மாவை சேனாதிராஜா, அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவும் தாம் பேச இருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழு ஒன்றை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். இக் குழுவில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பாகவும், போரினால் ஏற்பட்டுள்ள உடனடிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பொறுத்த வரை பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களைப் பரவலாக்க தான் தயாராக இருப்பதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச ஊடகவியலாளர்களிடம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்ததோடு, இதனை கூட்டமைப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இவ் விவகாரம் தொடர்பாக இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது விரிவாக ஆராய்யப்படும் என மாவை சேனாதிராஜா குறிப்பிட்டார்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வது தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுவார்த்தை கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதிய பாலத்தை...

சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட படைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் படைத்தரப்பின் உயரதிகாரிகள் பலாலி விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் படைத்தளபதிகள் உட்பட மேலும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

288 மீற்றர் நீளம் கொண்ட இந்த இருவழிப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு எட்டு மாதங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவிடம் இருந்து பெறப்பட்ட 800 மில்லியன் ரூபா இலகு கடனைக் கொண்டு இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

கேரதீவையும் பூநகரி இறங்கு துறையையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இப்பாலம் கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான பயணத்தூரத்தை 120 கிலோ மீற்றரினால் குறைப்பதுடன், பயண நேரமும் 3 மணித்தியாலங்களால் குறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.




STUDY AND WORK IN UK

VISA WITHIN 4 WEEKS

அனைத்து மாணவர்களிற்கும் எமது நிறுவனத்தின் ஊடாக தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

- G.C.E O/L உடன் உயர்கல்வியை London இல் தொடர இறுதிச் சந்தர்ப்பம்
- IELTS கட்டாயம் தேவையில்லை.
- மிகக்குறைந்த கல்லூரிக் கட்டணங்களுடன் UKBA இனால் அங்கீகாரம் பெற்ற சிறந்த கல்லூரிகளில் சென்று உங்கள் பட்டப்படிப்பைத் தொடரலாம்.
- ஆங்கிலம் பேசக்கூடியவர்களுக்கு மிகவும் இலகுவாக London செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
- London இல் ஆங்கிலக் கல்வியை (Advance English) தொடர விரும்புபவர்களுக்கு நாம் 100% விசாவை உறுதிப்படுத்தித் தருவோம் என்பதைத் தெரிவித்து நிற்கின்றோம்.
- விசாவை 100% உறுதிப்படுத்துவதற்கு முன்னர் எந்தவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது. UK உயர்ஸ்தானிகர் நிலையம் (UKBA) மிக விரைவாக புதிய நடைமுறையை கொண்டுவருவதன் விளைவாக இன்றே இணையுங்கள்.
- எம் நிறுவனத்தின் மேலுமொரு சேவை: London இற்கான Student Visitor/January 10, 2011 இலிருந்து
- ஒரு வருடத்திற்கான Visit Visa வை சிறந்த சட்ட நிபுணர்களின் வழிகாட்டலிற்கமைய பெற்றுத் தருவோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.

Jaffna
U.SISIL REMINDAS
Contact No: 077 9265447

U.K Office
Mr.Harish
28, Colliege Road, Harrow,
HA II BE LONDON

Colombo Higher
Education Consultacy
N 51, DHARMAPALA MAWATHA,
Colombo 7

(C/399)



யாழ்.மாவட்ட மக்களுக்கு

SEC ஷாலோம் SHALOM

SHALOM வழங்கும் நற்செய்தி...!

உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.

குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...

வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-

SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/347)

தொலைபேசி : 0217901798 - 0771044861

தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.